**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 122/2024**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சேவியர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ஆரோக்கியம்** | **Calling** | : | **பழ வியாபாரம்** |
| **Village** | : | **குள்ளனம்பட்டி** | **Religion** | : | **கிறிஸ்துவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **72** |
| | | | **Dated** | : | **03.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 7), **திரு. சேவியர்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பழ வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டு அத்தாட்சிகளில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 2 முதல் 4 வரை குறியீடு செய்யப்படுகின்றன**. சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக சுமார் 04.00 மணியளவில் ஜான் தியேட்டர் அருகே நானும், பாலமுருகனும் பேசிக் கொண்டு இருந்தோம். இரண்டு போலீசார் வந்தார்கள். எங்களிடம்

சாட்சி கையொப்பம் மட்டும் கேட்டார்கள், நாங்கள் கையொப்பம் செய்தோம். வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

கடந்த 11.05.2018ம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு விஜய் தியேட்டர் முன்பாக நானும், பாலமுருகனும் நின்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் பின்னால் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரி ரவி என்ற முட்டைக் கண் ரவி என்பவரை எங்கள் முன்னிலையில் கைது செய்தும், காவல் நிலைய குற்ற எண். 481/2018 என்ற வழக்கில் எதிரியை விசாரிக்க எதிரி எங்கள் முன்னிலையில் யாருடைய தூண்டுதலோ, அச்சுறுத்துதலோ இல்லாமல் தானாக முன்வந்து, சுமார் 04.45 மணிக்கு தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும், பாலமுருகனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் மதியம் 01.00 மணிக்கு திண்டுக்கல் மேற்கு ரதவீதி, கச்சேரி தெருவில் யாரோ ஒருவரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பறித்துச் சென்ற ரூ.200/– ஐ எதிரி எடுத்து ஆஜர் செய்ய, அதனை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மாலை 05.45 மணிக்கு திண்டுக்கல், குள்ளனம்பட்டி, உணவு தானிய கிடங்கு அருகே உள்ள முட்புதரில் எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தியை மற்றொரு அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மேற்படி அத்தாட்சியில் நானும், பாலமுருகனும்

சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.03 17:27:12 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 122/2024**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாலமுருகன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அழகர்** | **Calling** | : | **பழ வியாபாரம்** |
| **Village** | : | **விராலிபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 38 |
| | | | **Dated** | : | 03.03.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 8), **திரு. பாலமுருகன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பழ வியாபாரம் செய்து வருகிறேன். அசா. 5 ஐ தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இரண்டு அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 5 முதல் 7 வரை குறியீடு செய்யப்படுகின்றன**. சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக சுமார் 04.00 – 05.00 மணியளவில் விஜய் தியேட்டர் அருகே நானும், சேவியரும் பேசிக் கொண்டு இருந்தோம். இரண்டு போலீசார் வந்தார்கள். எங்களிடம் சாட்சி கையொப்பம் மட்டும் கேட்டார்கள், நாங்கள்

கையொப்பம் செய்தோம். வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 11.05.2018ம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு விஜய் தியேட்டர் முன்பாக நானும், சேவியரும் நின்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் பின்னால் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரி ரவி என்ற முட்டைக் கண் ரவி என்பவரை எங்கள் முன்னிலையில் கைது செய்தும், காவல் நிலைய குற்ற எண். 481/2018 என்ற வழக்கில் எதிரியை விசாரிக்க எதிரி எங்கள் முன்னிலையில் யாருடைய தூண்டுதலோ, அச்சுறுத்துதலோ இல்லாமல் தானாக முன்வந்து, சுமார் 04.45 மணிக்கு தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும், சேவியரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் மதியம் 01.00 மணிக்கு திண்டுக்கல் மேற்கு ரதவீதி, கச்சேரி தெருவில் யாரோ ஒருவரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பறித்துச் சென்ற ரூ.200/- ஐ எதிரி எடுத்து ஆஜர் செய்ய, அதனை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மாலை 05.45 மணிக்கு திண்டுக்கல், குள்ளனம்பட்டி, உணவு தானிய கிடங்கு அருகே உள்ள முட்புதரில் எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தியை மற்றொரு அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மேற்படி அத்தாட்சியில் நானும், சேவியரும்

சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.03.03 17:27:22 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**